REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 13உ வியாழன் (29—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 14உ வெள்ளி (30—8—57) [இதழ் 65

'மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவது தவறு' என்கிறார் மேனன்!

பம்பாய், ஆக. 29—

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தாம் எதிர்ப்பதாக தற்காப்பு இலாகா மந்திரி வி. கே. கிருஷ்ணமேனன் இங்கு தெரிவித்திருக்கிறார்.

மருத்துவக் கல்லூரி மாணவர்களிடத்தில் பேசிய அவர், 'பொருளாதார அபிவிருத்திக்காக என்றுகூறி மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவது தவறானதாகும்; மேலும் மேலும் உற்பத்தியைப் பெருக்குவதுதான் பொருளாதார அபிவிருத்திக்குச் சிறந்த வழியாகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'தென்னவர் உள்ளம் நோக காரியங்கள் தொடர்ந்து நடந்தால்...'

'முடிவில் எதில் கொண்டுபோய்விடும் என்பதை சொல்லத் தயாரில்லை'

'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு; யோக்கியனுக்கு ஒரே எச்சரிக்கை போதும்'

'பாரத' சர்க்கார் போக்கு கண்டு 'கல்கி' குமுறல்

"பாரத சர்க்கார் அடிக்கடி இமயமுதல் குமரிவரை ஒரே தேசம் என்று சொல்லிவருகிறார்கள்; நாம் எல்லோரும் இந்தியர்கள் என்கிறார்கள்; ஆனால் இந்தச் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிய செய்திப் படத்தில், சுதந்திரத்திற்காக உடல்—பொருள்—ஆவி அத்தனையும் அர்ப்பணம் செய்த உத்தமத் தென்னாட்டுத் தலைவர்களை அடியோடு மூடி மறைத்துவிட்டார்கள்.

"இதனால் தமிழ் மக்கள் அளவுகடந்து உணர்ச்சிவசப்பட்டு, மனவருத்தமுற வேண்டாம் என்றுதான் நாம் கேட்டுக்கொள்கிறோம். உண்மை தேசபக்தி, பெரியோர்கள் செய்த தியாகம் ஆகியவற்றையெல்லாம் மறைத்துவிட முடியாது. அது என்றும் ஒளிவிசி வழிகாட்டத்தான் செய்யும். இன்றைய சர்க்கார் மூடி மறைத்துவிட்டதால் நமக்கு நஷ்டம் ஒன்றும் வந்துவிடவில்லை.

"பாரத சர்க்கார் இப்படித் தென்னாட்டு மக்களின் உள்ளங்களை நோகும்படி காரியம் செய்துகொண்டே போனால் முடிவில், எதில் கொண்டுபோய்விடும் என்று நாம் சொல்லத் தயாராயில்லை. இதனால் கஷ்டமும் நஷ்டமும் அடையப் போகிறவர்கள் பாரத சர்க்காரே ஒழியத் தென்னாட்டவர்கள் அல்ல! இதைச் சொல்ல வேண்டியது நமது கடமை என்றே கருதுகிறோம்."

—என்று, 'நஷ்டம் நமதல்ல' என்ற தலைப்பில், 1—9—57-ந் தேதியிட்ட 'கல்கி' இதழ் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து கூறியிருப்பதாவது:—

"'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு' என்பார்கள், தமிழ் மக்கள். ஆம், ஒருவன் யோக்கியனாகவும் நல்லவனாகவும் இருந்து தவறு செய்துவிட்டால் அவன் தவறை ஒரு தடவை எடுத்துச் சொன்னால் போதும்; அவன் திருத்திக்கொள்வான். இந்த நம்பிக்கை தமிழ் மக்களுக்கு அன்று தொட்டு இன்று வரை இருந்துவருகிறது.

"அந்தப் பண்பாட்டை அனுசரித்தே நாம் பாரதசர்க்காரை இந்தத் தடவை ஒன்றும் குறைகூறாமல் விடுகிறோம்.

"பாரத சர்க்கார் சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி எடுத்துள்ள செய்திப் படத்தைப் பற்றி நமக்கு ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன.

"பாரத நாட்டுச் சுதந்திரப் போராட்டத்திலே கலந்துகொண்டு, வெள்ளைக் கும்பினிக்காரர்களைக் கலங்க அடித்த வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள போன்றவர்களைப் பற்றி அந்தச் செய்திப் படத்தில் ஒரு குறிப்புக்கூடக் காணவில்லை.

"இவர்களைப் பற்றித்தான் ஒன்றுமில்லை என்றாலும் காந்தி யுகத்திலே அகிம்சைப் போரில் காந்தி மகானுடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று பாரத அன்னையின் விடுதலைக்கு மகத்தான தியாகங்கள் புரிந்த தென்னாட்டுத் தலைவர்களையாவது குறிப்பிட்டிருக்கலாம் அல்லவா? அவர்களில் ஒருவரையுமே காண்பிக்கவில்லை.

"நமது அருமைத் தலைவர் ராஜாஜியின் மகத்தான சேவையை உலகமே போற்றுகிறது.

"காந்தி மகான் தண்டி யாத்திரை சென்று உப்பு சத்தியாக்கிரகம் செய்தபோது ராஜாஜி வேதாரண்யத்திற்கு ஒரு பெரும் தொண்டர் படையுடன் சென்று உப்பு சத்தியாக்கிரகம் செய்தார். அந்த நாட்களில் பாரத மக்கள், கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையுள்ள மக்கள், எவ்வளவு ஆர்வத்தோடு அந்தப் பாதை யாத்திரைகளைக் கவனித்துவந்தார்கள். ஒவ்வொரு நாள் செய்தியையும் எவ்வளவு பரபரப்புடன் படித்துவந்து, தேசபக்தியும் உணர்ச்சியும் பெற்றார்கள். அந்த நாட்களையெல்லாம் பாரத சர்க்கார் மறந்திருப்பதை நினைக்க வியப்பாக இருக்கிறது!

"தீரர் சத்தியமூர்த்தி சட்ட சபைகளிலும், பலப்பல பொது மேடைகளிலும் ஏறி நின்று தேசத்தை வீறுகொண்டு எழச் செய்த காட்சியை இன்னும் நம் மக்கள் மறந்துவிடவில்லை. ஆந்திர கேசரியின் தீரம்மிகுந்த செயல்களை மக்கள் கதைசதையாகப் பேசுகின்றனர். வ. வே. சு. ஐயர், பாரதியார், வ. உ. சி. இப்படி எத்தனையோ தேசபக்தர்கள் இல்லையா? இவர்களில் ஒருவரைக்கூட நமது பாரத சர்க்கார் எடுத்துள்ள செய்திப் படத்தில் காண்பிக்கவில்லை. இது தென்னாட்டு மக்களின் உணர்ச்சியைத் தொட்டிருக்கிறது. இந்தச் செய்கை தமிழ் மக்களை எவ்வளவு ஆத்திரம் கொள்ளச் செய்திருக்கின்றது என்பது நமக்குவரும் கடிதங்கள் காண்பிக்கின்றன.

"சில ஆண்டுகளுக்கு முன் பாரத சர்க்கார் வெளியிட்ட தபால் பில்லைகளில், தமிழ்நாட்டுக் கவிஞர், கலைஞர் யாரையும் சேர்க்காமல் வடநாட்டுக் கவிஞர்களாகவே வெளியிட்டது பெரும் கிளர்ச்சியை உண்டுபண்ணியது. இப்பொழுது, இந்தச் செய்திப் படம் பெரும் கிளர்ச்சியையும், வருத்தத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது."

காங்கிரசின் தேர்தல் நிதிக்கு மூன்றரைக் கோடி ரூபாய்

கம்பெனிகளிடமிருந்து மட்டும் பெறப்பட்டதாம்

டாடா நிறுவன பங்குதாரர் வெளியிடும் தகவல்

'ஜனநாயக வளர்ச்சி கறைபடாமலிருக்க புனர்பரிசீலனை வேண்டும்'

பம்பாய், ஆக 29—

டாடா நிறுவனத்தார், காங்கிரஸ் கட்சிக்கு ரூ. 10,30,000 தந்ததை, கம்பெனிக் கூட்டத்தில் ஒரு பங்குதாரர் ஆட்சேபித்திருக்கிறார்.

இதற்குப் பதிலளித்த கம்பெனி முதலாளியான டாடா, அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவது, தொழிலாளருக்கு வீடுகட்டித் தருவது போன்ற விவகாரங்களில் மக்கள் சபைதான் முடிவு கூற வேண்டும் என்றும், காங்கிரசிற்கு நிதி தந்தது கம்பெனியின் நலன்களை உத்தேசித்துத்தான் என்றும் கூறினாராம்!

ஆட்சேபம் கிளப்பியபங்குதாரர் தானே காங்கிரஸ் கட்சிக்காக பம்பாய் ஸ்டாக் எக்சேஞ்சில் பணம் திரட்டியதாகவும், ஆனால், ஒரு நிறுவனம் கட்சிகளுக்கு நிதி வழங்குவது கூடாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் பேசிய அவர், கம்பெனியின் முதலாளிக்கு இந்த விவகாரம் குறித்து பம்பாய், கல்கத்தா உயர் நீதிமன்றங்கள் தந்துள்ள கருத்துக்களைச் சுட்டிக்காட்டியதுடன், கடந்த தேர்தலில் காங்கிரஸ், கம்பெனிகளிடமிருந்து மூன்றரைக் கோடி ரூபாய்வரையில் திரட்டியிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனநாயக வளர்ச்சியைக் கறைபடாமல் காப்பாற்றுவதற்காக, காங்கிரஸ் கட்சிக்கு நிதி தரும் விவகாரத்தை டாடா கம்பெனியார் மீண்டும் புனராலோசனை செய்யவேண்டும் என்றும் அந்தப் பங்குதாரர் கோரியிருக்கிறார்.

காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் பணம்தர முடிவு செய்ததை நியாயப்படுத்துவதற்காக, கம்பெனி முதலாளியான டாடா கூறியதாவது:—

"தனியார் துறையும் கலப்புப் பொருளாதாரமும் இயங்கக் கூடிய ஆட்சி காங்கிரஸ் கட்சியின் ஆட்சிதான். எனவேதான், சோஷலிஸ்டுகளோ, கம்யூனிஸ்டுகளோ வருவதைவிட, காங்கிரசே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கம்பெனி விரும்பியது."

தென்னவரை மயக்க வடவர் செய்யும் சதி?

பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்றுத்தர ஏற்பாடாம்

'ஒற்றுமையை வளர்க்க இந்த நடவடிக்கை' என்கிறார் துணைவேந்தர்

இந்தித் திணிப்பிற்காக தமிழரின்—தென்னவரின் மனமயக்கத்தை வேண்டி வடவர் செய்துவரும் வஞ்சகச் செயல்கள் பலப்பல; அவற்றுள் ஒன்றுதான், 'வடவர் தென்னாட்டு மொழிகளுள் ஏதேனும் ஒன்றைக் கற்றுக்கொள்ளவேண்டும்' என்பதாகும்.

இந்தச் சதிநோக்கம் இப்போது திட்டமாக உருவாகியிருப்பதாக பஞ்சாப் மாநிலத் தலைநகர் சந்திகாரிலிருந்து ஒரு செய்தி தரப்பட்டிருக்கிறது.

பஞ்சாப் பல்கலைக் கழகத்தில், தென்னாட்டுமொழி ஒன்றைக் கற்றுத்தர ஏற்பாடு செய்வது என்று முடிவாகியிருப்பதாக அப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. சி. ஜோஷி தெரிவித்திருக்கிறார்.

முதலில், தமிழ்மொழி கற்றுத்தர ஏற்பாடாகியிருப்பதாகவும், பின்னர் தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய மொழிகள் கற்றுத்தர ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறாராம்!

"நாட்டின் ஒற்றுமையை வளர்ப்பதற்காகத் தென்னாட்டு மாணவர்கள் இந்திக் கற்பதைப் போல, வடநாட்டு மாணவர்கள் தென்னாட்டு மொழிகளுள் ஒன்றை உபபாடமாகக் கற்க வேண்டுமென கல்வி ஆலோசனை போர்டாரும், மத்திய சர்க்காரும் கடந்த சில காலமாகத் தெரிவித்து வந்துள்ள கருத்துக்கு ஒப்பவே இந்த முடிவு செய்யப்பட்டது" என்றும் அந்தத் துணைவேந்தர் கூறியுள்ளார்.

கலைவாணர் உடல்நிலை

சென்னை, ஆக. 29—

கடந்த 15 நாட்களாக சென்னை தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் உடல்நிலை படிப்படியாகச் சீரடைந்துவருகிறது. நேற்று மாலை பிரத்தியேக சிகிச்சை செய்யப்பட்டது. சிறு அளவு உணவும் தரப்படுகிறது. எனினும், எழுந்து நடமாடக்கூடிய சக்தி இன்னும் ஏற்படவில்லை. எனவே, மேலும் இருவாரங்கள் மருத்துவ விடுதியில் தங்கியிருக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

நேற்று மாலை கலைவாணர் அவர்களைத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி. சண்முகம், போனூர் சுப்பிரமணியம் ஆகியோர் பார்த்துவந்தனர்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் | ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 29—8—57 வியாழன்

புத்தம் புதிய சிந்தனைத் துறை

டெல்லி மக்கள் சபையில் மொத்தத்தில் ஐந்நூறு உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் பெரும் எண்ணிக்கையினர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

எதிர்க் கட்சியினர் எனக் குறிப்பிடத்தகுந்த நிலையில் பொதுவுடைமைக் கட்சியினரும்,சமதர்மக்கட்சியினரும்சிலர் உள்ளனர். அவர்களை நீக்கி சில சுயேச்சை உறுப்பினர்களும் உள்ளனர்.

இவர்கள் அனைவரும் 'ஒரே இந்தியா' என்ற இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றவர்களாவர். எவ்வளவுதான் இவர்கள் அனைவரும், தங்களைத் தேர்ந்தெடுத்த மாநில நலம் பற்றி சண்டப் பிரசண்டம் செய்தபோதிலும், அவை அனைத்தும் 'ஒரே இந்தியா' என்ற குறிக்கோளுக்குக் கேடு நேராதவகையிலேயே அமைந்திருக்கும்.

'ஒரே இந்தியா' தங்கள் உயிர் மூச்சு என்பர், இவர்கள். 'ஒரே இந்தியா' தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் எனப் பரணி பாடிக்கொண்டிருப்பவர், இவர்கள்.

'ஒரே இந்தியா' எனப் பேசிப் பேசிப் பழகிவிட்டவர்கள், இவர்கள். பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டவர்கள், இவர்கள்.

'ஒரே இந்தியா' என்ற ஒரே ஒரு சிந்தனைதான் மக்கள் சபையை இதுவரை கப்பிக் கொண்டிருந்தது. அந்த ஒரே ஒரு சிந்தனை வழியில்தான், மக்கள்சபை உறுப்பினர் அனைவரும் நேற்றுவரை செயல்பட்டும் வந்துள்ளனர்.

'ஒரே இந்தியா' என்றே சிந்திக்கும் வழி இதுவரை இருந்தது. பிரச்சினைகளை அணுகும் முறையும், அதற்கொப்பவே இதுவரை பின்பற்றப்பட்டுவந்தது.

ஆனால் இன்றே, 'ஒரே இந்தியா' என்ற அந்த சிந்தனைத் துறையில் கிறல் காணத் தொடங்கிவிட்டது. அவ்வாறு காணும் கிறலும், எதிர்காலத்தில் விரிவடையக்கூடும் என்ற பேருண்மையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

இதுநாள்வரை என்றும் கண்டறியாததும், கேட்டறியாததுமான ஒரு புத்தம் புதிய சிந்தனைத் துறையை, மக்கள் சபை இன்று காண்கிறது—கேட்கிறது. பிரச்சினைகளை அணுகும் முறையில், புத்தம் புதியதோர் மாற்றத்தை இன்று மக்கள் சபை அறியத்தொடங்கி இருக்கிறது.

பழகிய பழைய சிந்தனைத் துறைக்குப் பதிலாக புதிய சிந்தனைத்துறை மக்கள் சபையில் உலா வர, கட்டவிழ்க்கப்பட்டு இருக்கிறது. இனி அப்புத்தம் புதிய சிந்தனைத் துறைக்குத் தொடர்புடைய செயல்முறை, உடனடியாக இல்லையானாலும் காலம் தாழ்த்தியாவது உருவெடுத்தாக வேண்டும். உருவெடுப்பது நிச்சயம். கல்லில் செதுக்கிய எழுத்தாகும்.

'ஒரே இந்தியா'வின் போலிப் 'பொது நலம்' எனப் பசப்பி, மாநிலப் பொது நலன்களைத் திரையிட்டு மூடி மறைப்பதே, மக்கள் சபையில் இதுவரை கோலோச்சி வந்த சிந்தனைத் துறையின் தனிச் சிறப்பாக இருந்துவந்திருக்கிறது. இன்று அது துண்டிக்கப்படுகிறது. புதிய சிந்தனைத்துறை, அதற்கு மாற்றாக அளிக்கப்படுகிறது.

அந்தத் திருவினையை இளவல் சம்பத் அஞ்சாநெஞ்சுடன் ஆற்றி இருக்கின்றார். 'ஒரே இந்தியா' என்ற பழைய சிந்தனைத் தருவை வெட்டியெறியக்கூடிய ஆற்றல் இயல்பாக அமைந்திருக்கக்கூடிய புத்தம் புதிய சிந்தனை விதையை, தமது சொல்லம்புகள் மூலம் விதைத்திருக்கின்றார் இளவல் சம்பத்.

'ஒரே இந்தியா' என்ற பழைமை சிந்தனை மடமைத் தூர்த்துவிடக்கூடிய புதிய சிந்தனைத் துறையை ஒருவர் தமது இதயத்திலிருந்து எரிமலை என வெடித்துக் கிளம்பும் தீப்பிழம்பை நிகர்த்த கூர்மையான சொற்களால் திறந்துவிடுகிறார் என்றால், பழைய சிந்தனை வழி இதுவரை இயங்கிவந்தவர்கள், அதை வரவேற்கவா செய்வார்கள்? எதிர்த்தனர்—ஏளனம் பேசினர்—ஏசினர்—இழிமொழி வீசினர்—இரைந்தனர்—அவர் புத்துரை தம் செவி புகாவண்ணம் தம்தம் காதுகளைப் பொத்தியும்கொண்டனர். இளவல் சம்பத் அஞ்சினாரில்லை. சொல் சோர்வுபட்டாரில்லை.

எண்ணியதைத் தெளிவுபட இயம்பினார். எதிர்த்தவர் வெட்கப்படவும், வாயடைத்துப் போகவும் தமிழன் வீரத்தை வெளிக்காட்டினார். தமிழன் மறத்தன்மையைநிலைநாட்டினார்.

இளவல் சம்பத், இதுவரை என்றும் மக்கள் சபை கேட்டறியாத புத்தம் புதிய சிந்தனைத் துறையை, மக்கள் சபைக்கு வழங்கி இருக்கின்றார். அவர் உருவாக்கிய புதிய சிந்தனைத்துறை, அதேவழியில் இயங்கவேண்டும் எனக்கருதிக் கொண்டும்—ஆனால் அதனை வெளியில்கூற அஞ்சிக்கொண்டும் உள்ள மக்கள் சபை உறுப்பினர் பலரை,தம் பால் கவர்ந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி சென்னை 'மெயில்' இதழில் 'பெட்ரினக்ஸ்' என்ற புனைப் பெயரால், டெல்லியில் தாம் கண்ட வியத்தகுக் காட்சியை வியந்து விளக்கமாக வரைந்துள்ளார். அதன் சாரத்தை, நமது இதழில் நாம் வெளியிட்டுள்ளோம்.

இளவல் சம்பத்தின் முதல் முழக்கம், எதிர்பாரா விளைவைத் தந்திருக்கின்றது. நமது மக்கள்சபை நுழைவு வீண் போகவில்லை. அதற்குரிய பயனைத் தரத் தொடங்கி இருக்கிறது. தாயகத் திருநாட்டின் விடுதலைக்காக சம்பத் ஆற்றிய திருப்பணியை, நாம் 'வாழ்க' என வாழ்த்துகிறோம்; 'வெல்க' எனக்கூறி வரவேற்கின்றோம்.

வசூலாகாத வருமான வரி!

மத்திய நிதி அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, ஆக. 28—

1957 ஏப்ரல்வரை மொத்தம் ரூ. 209·67 கோடிவரை வருமான வரித் தொகை செலுத்தப்படாமலும், இந்திய அரசாங்கத்தால் வசூலிக்கப்படாமலுமாக உள்ளது என்று மக்கள் சபையில் நிதி அமைச்சர் டி. டி. கே. தெரிவித்துள்ளார்.

1954 ஏப்ரல்வரை 15,52,932 வருமான வரி வழக்குகள் விசாரணையில் இருந்துள்ளனவாம்!

1955 ஏப்ரலில் 14,30,960 வழக்குகள் விசாரணையில் இருந்தனவாம்!

1956 ஏப்ரலில் 13,98,954 வருமான வரி வழக்குகள் விசாரணையில் இருந்தனவாம்!

1957 ஏப்ரலில் மொத்தம் 12,21,121 வருமான வரி சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரணையில் இருந்தனவாம்!

5,27,000 வழக்குகள் பற்றிய விசாரணை முடிந்து வருமான வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

பாக்கிகளை வசூல் செய்ய வருமான வரி இலாகா விரிவுபடுத்தப்பட்டு அதிக அளவில் ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனராம்!

வருமான வரி விசாரணையின் போது பல வழக்குகளில் தொகை குறைத்து மதிப்பிடப்பட்டதாம்!

அதிக அக்கறையுடன் கவனிக்கப்பட வேண்டிய வழக்குகள் மட்டும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு அதிகமாக விசாரணையில் உள்ளதாம்!

வரிதராமல் ஏய்ப்பவர்களை கண்டுபிடிக்க பரிசாம்!

சர்க்காரின் கையாலாகாத்தனம்!

புதுடில்லி, ஆக. 28—

வரி கொடுக்காமல் பலர் ஏமாற்றிவருவதைப் பற்றி இந்திய அரசாங்கத்திற்கு அக்கறை பிறந்துவிட்டதாம்!

இதுவரை வரி கட்டாமல் ஏய்த்துவருபவர்கள் பற்றி பல கடிதங்கள் சர்க்காருக்கு வந்துள்ளனவாம்; ஆனால் அதைக் கொண்டு இதுவரையில் ஒன்றும் செய்ய தனக்குத் திறமை இல்லை என்பதை டி. டி. கே. ஒப்புக் கொண்டுள்ளார்.

வரி தராமல் ஏய்ப்பவர்களைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு, உரிய வரி வசூலிக்கப்பட்டதும் அதில் ஒரு சதவிகிதம் பரிசாகத் தாரவும் தயார் என்று மக்கள்சபையில் டி. டி. கே. தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெறும் வயது

உயர்த்த இயலாதாம்!

புதுடில்லி, ஆக. 28—

தற்போது அரசாங்க ஊழியர்கள் 55-வது வயதில் கண்டிப்பாக ஓய்வு பெற வேண்டியுள்ளது. இந்த வரம்பை உயர்த்தி, 55-வது வயதுவரையில் ஊழியம் செய்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென்று பொதுவாகக் கோரப்பட்டுள்ளது.

கோரிக்கையை ஆராய்ந்த பின்னர், ஓய்வுபெறும்வயதை உயர்த்துவதற்கான உத்தேசம் அரசாங்கத்திற்குக் கிடையாதென மக்கள் சபையில் உள்நாட்டு உதவி அமைச்சர் தத்தார் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பேரரசின் மாற்றுந்தாய் மனப்பான்மை

அபிவிருத்தித் திட்டங்களில் மைசூரைப் புறக்கணித்த நிலை குறித்து விளக்கம்

புதுடில்லி, ஆக. 27—

'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வடக்கை வளமாக்குகிறது—தெற்கை நலிவுறச் செய்கிறது' என்ற உண்மையை நாம் மக்கள் மன்றங்களில் எடுத்துரைத்து வருகிறோம்; அந்தப் பேருண்மையை உறுதிப்படுத்தும் வகையில் பல துறைகளில் நல்ல ஆதாரங்கள் கிடைத்துவருகின்றன.

'மத்திய அரசாங்கம் மாற்றுந்தாய் மனப்போக்கில் நடந்துவருகிறது' என்று மைசூர் மாநிலத்திலிருந்து மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சி. ஆர். பாசப்பா என்பவர் கூறியுள்ளார்.

"இந்தியாவின் முதல் இரும்பு உருக்குத் தொழிற்சாலையை மைசூர் மாநிலத்தில் பத்திராவதியில் ஆரம்பிக்க மத்திய அரசாங்கம் முதலில் முடிவு செய்திருந்தது; நாளடைவில் இம்முடிவு குறித்து அக்கறை எடுத்துக்கொள்ளாமல், மாற்றுந்தாய்க்கொடுமைக்குதென் பகுதியிலுள்ள மைசூர் மாநிலத்தை உள்ளாக்கிவருகிறது.

"அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ. 5 கோடியைக் குறைத்துவிட்டது; முன்பு 11 கோடி ஒதுக்கப்பட்டது—இப்போது ரூ. 6 கோடி மட்டுமே மைசூர் மாநிலத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

"அதே பத்திராவதியில், துருப் பிடிக்காத எஃகு சாமான்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது; ஆனால் அதற்கு மத்திய அரசாங்கம் மானிய உதவித் தொகையைக் குறைத்துவிட்டது; இதனால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு இருந்த சாதகமான சூழ்நிலைகள் பாழாகிவிட்டன"

என்றும் அந்த உறுப்பினர் மக்கள் சபையில், வடநாடு வாழ தென்னாடு புறக்கணிக்கப்படும் கொடுமையைப் பற்றி எடுத்துரைத்துள்ளார்.

தென்னாட்டில் எண்ணெய் வளம்!

கடலோரப் பகுதியில் ஆராய்ச்சி நடக்கும்

தென் இந்தியாவில் கடற்கரையோரமாக, கடல் வண்டல் படிந்துள்ள மண் திட்டுகள் ஏற்பட்டிருப்பது உண்மைதான் என்றும், அந்த வண்டல் மண் திட்டுகளில் எண்ணெய் கிடைக்குமா என்பது பற்றி இரண்டாவது திட்டத்தின் இறுதியில் பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்றும் மாநிலங்கள் சபையில் சுரங்க கனிப்பொருள் அமைச்சர் மாளவியா ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

சென்னையில் உயர்தரக் கலை விஞ்ஞானக் கூடம்

ஜெர்மனி உதவி செய்யும்

சென்னையில் 'தென் பகுதி உயர்தர கலை விஞ்ஞான நிலையம்' ஒன்றை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக மக்கள் சபையில் மத்திய கல்வி அமைசசர் ஆசாத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையத்திற்கு ஜெர்மனி உதவியளிக்க இசைந்துள்ளதாம்.

இரயில்வே ஊழியர்களுக்கு ஓய்வுகால ஊதியம்

மக்கள் சபையில் தகவல்

டில்லி, ஆக. 27—

புதிய இரயில்வே ஊழியர்களுக்கான ஓய்வுகால ஊதியமும் (பென்ஷன்) வெகுமதி தொகையும் (கிராச்சுயூடி) அளிப்பதற்கான திட்டத்தைப் பற்றி மத்திய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

இந்தத் திட்டத்தின்கீழ், இந்த ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து வேலைக்குப் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்கள் பயனடைவார்களாம்; பழைய ஊழியர்களும் விரும்பினால் இந்தத் திட்டம் அவர்களுக்கும் விரிவுபடுத்தப்படுமாம்.

மக்கள் சபையில் இரயில்வே உதவிஅமைச்சர் ஷாவாஸ்கான் இத்தகவலைத் தந்துள்ளார்.

தானே இயங்கும் தறிகள் பற்றி விளக்கம்

புதுடில்லி, ஆக. 26—

"இந்தியாவில் ஒன்பது துணி ஆலைகள், பூரணமாக தானே இயங்கும் தறிகளுக்கு மாறியுள்ளன; 52 ஆலைகளில் தானே இயங்கும் தறிகளும், சாதாரணத் தறிகளும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன; 231 ஆலைகள் சாதாரணத் தறிகளை மட்டிலுமே உபயோகித்து வருகின்றன" என்று, மாநிலங்கள் சபையில் மத்திய வர்த்தகத் தொழிலியல் மந்திரி தெரிவித்தார்.

"தொழிலாளர்களில் எவரும் ஆட்குறைப்பு செய்யப்படமாட்டார்கள் என்ற நிபந்தனையின்மீது தவிர, வேறுவகையில், சாதாரணத் தறிகளுக்குப் பதிலாக தானே இயங்கும் தறிகளை உபயோகத்துக்குக் கொண்டுவருவதற்கு சாதாரணமாக அனுமதியளிக்கப்படுவதில்லை என்றும், இந்த மாற்றம் காரணமாக உபரியாக நிற்கும் தொழிலாளர்களுக்கு, ஆலைகளில் அதிகப்படி வேலை விடுதிகளை நடத்துவதன் மூலமோ, அல்லது சம்பந்தப்பட்ட துணி ஆலைகளின் இதர இலாகாக்களிலோ வேலை கொடுக்கப்படுகிறது" என்றும் மந்திரி கூறினார்.

"இந்தியாவில் தனியார் தொழில் நிறுவனமொன்று தானே இயங்கும் தறிகளை உற்பத்தி செய்து வருகிறது; இந்த நாட்டில் 1956-ல், 161 தானே இயங்கும் தறிகள் உர்பத்தி செய்யப்பட்டன; அதற்கு முந்திய ஆண்டில் 70 தறிகள்தான் உற்பத்தி செய்யப்பட்டன; இவ்வாண்டில் முதல் மூன்று மாத காலத்தில் 9 தானே இயங்கும் தறிகள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ஆண்டுதோறும் 8,500 தானே இயங்கும் தறிகளுக்குத் தேவையிருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் மந்திரி கூறினார்.

உரிமை வழங்கினால் ஒற்றுமை குலையுமா?

கடலூர் சிறப்புக் கூட்டத்தில் ஆர்.எஸ். பாண்டியன், எஸ்.எஸ். தென்னரசு

கடலூர், ஆக. 26—

18—8—57 காலை 10-30 மணியளவில் இவ்வூர் நியூ சினிமாவில் இரண்டாவது வட்ட தி. மு. கழகச் சார்பில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

வழக்கறிஞர் இளம்வழுதி அவர்கள் முன்மொழிய, புதுவை வழக்கறிஞர் பெருமாள் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தலைவர் உரைக்குப்பின் வழக்கறிஞர் இளவழுதி அவர்கள் சிறிது நேரம் பேசினார்கள். அதன்பிறகு தோழர் எஸ். எஸ் தென்னரசு, 'இதுதான் தி. மு. கழகம்' என்ற தலைப்பிலும், முகவை ஆர். எஸ். பாண்டியன் 'இன்றைய அரசியல்' என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினர்

தோழர் எஸ். எஸ். தென்னரசு பேசுகையில் குறிப்பிட்டதாவது :

"நாட்டுப் பிரிவினை கோரி காங்கிரசாரை நாம் நயமாகக் கேட்டுக் கொண்ட காலம் மறைந்துவிட்டது; அப்போதெல்லாம், 'உங்களுக்குத் திராவிட நாடு கிடையாது-இடுகாடுதான்' என்று இகழ்ந்துரைத்தார்கள். 'நாட்டுப் பிரிவினை கேட்பதே தவறு' என்றார்கள். அதையே நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி பொதுமக்களின் ஆதரவைப் பெற்ற பிறகு, காங்கிரசாரின் தொனி மாறி வருவதைப் பார்க்கிறோம்: 'நாடு பிரித்தால் ஒற்றுமை குலையும்' என்கிறார்கள். ஒரு தேசத்தில் எப்போது ஒற்றுமை குலைகிறது என்பதை ஆட்சியாளர்கள் ஏனோ புரிந்து கொள்ளாதவர்களாகவே இருக்கிறார்கள். உரிமை மறுக்கப்படும் போதும், உண்மை உதாசீனம் செய்யப்படும்போதும், ஏழ்மை அலட்சியப்படுத்தப்படும் போதும் தான் ஒரு நாட்டில் ஒற்றுமை குலையும்; இது காறும் சாய்ந்த முடியரசுகளின் சோகக் கதை இந்த உண்மையைத்தான் உலகத்திற்குத் தெரிவித்திருக்கிறது. ஆனால் காங்கிரஸ் ஆட்சியினர்கள், தென்னாட்டு மக்களின் உரிமையை மதித்தால் ஒற்றுமை குலையும் என்கிறார்கள்!

"வெள்ளைக்காரர்களிடமிருந்து தியாகத்தால் இந்தியாவை மீட்டோம் என்கிறார்கள்; அப்படிப் பார்த்தால், இன்றையக் காங்கிரஸ்காரர்களின் சித்தாந்தப்படி காங்கிரசுக்கும் இங்கிலாந்துக்கும் பெரும் பகைமூண்டு 'ஒற்றுமை' குலைந்தல்லவா போயிருக்க வேண்டும்? பக்கிங்காம் அரண்மனையிலே பண்டிதருக்கு விருந்தல்லவா நடைபெறுகிறது? ஒற்றுமை குலையக்காணோமே! காரணம் என்ன? இந்தியா பிறரது நாடு என வெள்ளையன் கருதினான்; நாட்டை விட்டான்; போனான்—சுமூகம் ஏற்பட்டது!

"அதைப்போல், இன்றைய தினம் காங்கிரசாரும் தென்னாடு—திராவிடநாடு தனி நாடுதான் என்று உணர்ந்தால்தான் எதிர்கால இந்தியா ஒற்றுமையாக இருக்கும். உரிமை மறுக்கப்பட்டால்தான் இந்தியாவின் ஒற்றுமை குலைய வழிபிறக்குமேயன்றி, உரிமை வழங்குவதால் அல்ல! உண்மையிலேயே நாட்டின் ஒற்றுமையை காங்கிரசார் மதிப்பதானால் தென்னாட்டைப் பிரித்தால்தான் முடியும்."

இறுதியாக தோழர் ஆர். எஸ். பாண்டியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"500 ஆண்டுகளாக ஒன்றாக இருந்த நார்வேயும், சுவீடனும், இன்றைக்குத் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து வாழ்கின்றன. பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு அஞ்சி, ஒன்றாக வாழ்வதால் பாதுகாப்புக் கிடைக்கும் என்று எண்ணி ஒன்றுபட்ட ஹாலந்தும், ஸ்பெயினும் 30 ஆண்டுகள்கூட ஒன்றாக வாழவில்லை; தனித்தனியே பிரிந்துவிட்டன.

"இங்கிலாந்துடன் இணைந்திருந்த அயர்லாந்து, டிவேலரா காலத்தில் பிரிந்து வாழ்கிறது.

"இன்றும், இங்கிலாந்தில் இணைந்து கிடக்கும் வேல்ஸ், இன்று, தனியாகப் பிரிந்து செல்லக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது.

"நமது காலத்தில்தான்-நமது கண் முன்பாகவே, இந்தோ-சீன நாடுகள் என்ற பெயரில் ஒரே ஆட்சியின்கீழிருந்த வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய நாடுகள் தனித்தனி ஆட்சியுரிமை பெற்றன என்பது மட்டுமல்ல; வியட்நாம், வடக்கு — தெற்கு என இரு கூறுகளாக்கப்பட்டிருக்கிறது.

"உலக வரலாற்றில் இது போன்ற இன்னும் எத்தனையோ பிரிவினைச் சம்பவங்களை நாம் காட்டமுடியும். அப்படியிருக்க, தனி இன வரலாறும், கலாச்சாரமும், பண்பாட்டுப் பெருமையும் கொண்ட நாம், நமக்கு உரிய அரசினை அமைத்துக்கொள்ள திராவிடநாடு கேட்பது எப்படித் தவறானதாகும்?"

சேலம் மாவட்ட தி. மு. க. செயற் குழு

முடிவுகள் விவரம்

சேலம், ஆக. 28—

சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் மாவட்டச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் 25—8—57 அன்று சேலத்தில் உள்ள கழகப் பணிமனையில் நடைபெற்றது.

சேலம் மாவட்டத்தில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட கிளைகளைப் பற்றிய அறிக்கை வாசிக்கப்பட்டது. சேலம் மாவட்டத்தில் மொத்தம் 203 கிளைகள் உள்ளன. மாவட்டத்தில் பல பாகங்களிலிருந்தும் சுமார் 85 பிரதிநிதிகள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

மாவட்டக் கழகத்திற்கு முழுநேரத் தொண்டர்களை நியமிப்பது சம்பந்தமாக விவாதம் நடைபெற்றது. முடிவில், மாவட்ட தி. மு. கழகத்திற்கு முழு நேரத் தொண்டர் ஒருவரை நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

மாவட்டக் கழகச் சார்பில் பொதுக்கூட்டங்களை நடத்த முடிவு செய்யப்பட்டது.

சமீபத்தில் நடந்த ஏற்காடு இடைத் தேர்தலைப் பற்றி கூட்டத்தில் ஆராயப்பட்டது.

டிசம்பர் திங்கள் இறுதியில் சேலம் மாவட்ட 3-வது தி. மு கழக மாநாட்டை பரமத்தி வேலூரில் (நாமக்கல் தாலுகாவில்) நடத்த முடிவு செய்யப்பட்டது. இம்மாநாட்டிற்கு, சேலம் மாவட்ட தி. மு கழகச் செயற்குழு உறுப்பினர்களையே வரவேற்புக் குழுவினராகவும் நியமிக்க முடிவு செய்யப்பட்டது.

சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் நன்றி கூறியபின் கூட்டம் முடிவுற்றது. (ந. நி.)

காட்பாடி வெடி விபத்தின் எதிரொலி

பட்டாசு வெடிகள் போக்குவரத்துக்குத் தடை

புதுடில்லி, ஆக. 28—

பட்டாசு போன்ற வெடி மருந்துப் பொருள்களை இரயில் மூலம் அனுப்புவதற்கு, தற்காலிகத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இரயில்வே துணையமைச்சர் ஷாநவாஸ்கான் மாநிலங்கள் சபையில் இதைத் தெரிவித்தார்.

இரயில்வேக்களில் அடிக்கடி வெடி விபத்துக்கள் ஏற்படுவதே இதற்குக் காரணம்.

அண்மையில் காட்பாடி புகைவண்டி நிலையத்தில் ஒரு வெடி விபத்து ஏற்பட்டு அதனால் 8 பேர் வரை உயிர் துறந்த செய்தி நினைவிருக்கலாம்.

இத்தகைய வெடி மருந்துப் பொருள்களை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளவேண்டாம் என்றும், ஏற்கெனவே பெற்றுக் கொண்டவற்றை ஆங்காங்கு நிறுத்திவைக்கும்படியும் இரயில் நிலையங்களுக்கு அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்துள்ளனராம்.

அண்மையில் நடந்த வெடி விபத்துக்கள் குறித்து நடந்து வரும் விசாரணையின் முடிவு தெரியும்வரை இத்தடையுத்தரவு அமுலில் இருக்குமாம்.

காமன்வெல்த் நாடாக மலேயா இயங்குமாம்

கோலாலம்பூர், ஆக. 26—

ஆகஸ்டு 31-ந் தேதி மலேயா காமன்வெல்த் நாடுகளில் ஒன்றாக விளங்கும் என்று பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் கூறியுள்ளார்.

மடத்துவால் தி.மு.க துவக்க விழா

தோழியர் சத்தியவாணிமுத்து, கி. மனோகரன் கலந்துகொண்டனர்

நாகர்கோவில், ஆ. 27—

நாஞ்சில் மாவட்டத்தைச் சேர்ந்த மடத்துவாசல் தி. மு. கழகக் கிளையின் துவக்க விழா 9—8—57 இரவு 7 மணிக்கு நடைபெற்றது.

தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ. அவர்கள் கழகக் கட்டிடத்தைத் திறந்துவைத்து, கொடியேற்றிவைத்தார்.

தோழர் கி. மனோகரன் விழாவுக்குத் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப் பின் கண்ணம்புதூர் தோழர் வன்னிய பெருமாள் கழகக் குறிக்கோள்களை விளக்கிப் பேசினார்.

பிறகு தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டு, மலர்மாலைகளும் கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள், சட்டசபையில் தி. மு. கழகத்தின் சாதனைகள்குறித்தும், நம்மைக் கிண்டல் செய்வோருக்குத் தக்க பதில் தந்தும், திராவிடநாடு பிரிய வேண்டிய அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

மேலும் அவர் பேசியதாவது:

"எதிர்தரப்பினர் கூறுவது போல் அரும்பு மீசையுள்ள வாலிபர்கள் எங்கள் கழகத்திலுண்டு. அஞ்சாநெஞ்சம் படைத்த ஆண்மையாளர்கள் உண்டு; வீராங்கனைகளாகத் திகழக்கூடிய திராவிடப் பெண்மணிகள் உண்டு. ஆனால் எங்களது கொள்கை ஜனநாயக சக்தி படைத்தது; திராவிட மக்கள் ஒன்றுசேர வேண்டுமென்பது எங்கள் அவா. இதனையெல்லாம் அறிந்தும் எங்களைப் பார்த்து 'நாசவேலை செய்யாதீர்கள்' என்று கூறுகிறார்களே, அவர்களை மக்களின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறோம்.

"'திராவிடமாவது—ஆரியமாவது' என்று கூறும் இன்றைய நிலை மாறி, ஒருநாள் வடவர், 'திராவிடம் நமது சொத்தல்ல; அது திராவிடருக்கே உரித்தானது' என்று சொல்லத்தான் போகிறார்கள். சமாதான முறையில் திராவிடத்தை நாம் பிரித்துத்தர கேட்கிறோம்; ஆனால் கத்திமுனையிலேதான் திராவிடம் பிரிய வேண்டுமென்றிருந்தால், திராவிடத்தின் மக்களனைவரும் ஆணும் பெண்ணும் திரண்டு இரத்தம் சிந்தியும் பெறத் தயாராக இருக்கிறோம்."

தலைமை வகித்த தோழர் கி. மனோகரன் முடிவுரையாக, நாட்டின் நிலைமை குறித்தும், குறிப்பாகத் தமிழகத்தில் கம்யூனிஸ்டுகளின் போக்கு குறித்தும் விளக்கிப்பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் டாக்டர் வரதராசலு (நாயுடு) மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் கோட்டாற்றிலுள்ள மருத்துவ விடுதியை ஒரு மாவட்ட மருத்துவ விடுதியாக மாற்றக் கோரியும் 29—7—57-ல் ஒழுகினசேரி சந்திப்பில் முகாமிட்டிருந்த ரிசர்வு போலீசார் சிலர் அங்கு வந்துகொண்டிருந்த பொதுமக்களிடமும், வியாபாரிகளிடமும் மிருகத்தனமாக நடந்துகொண்டதைக் கண்டித்தும் அந்தப் போலீஸ் முகாமை அந்த இடத்தைவிட்டு மாற்றக் கோரியும், திருவாங்கூர்தென் இந்துக் கல்லூரியில் இதுவரை இயங்கி வந்த தமிழ் எம்.ஏ. வகுப்பை எடுத்துவிட சென்னைப் பல்கலைக் கழகம் முடிவு செய்திருப்பதையறிந்து வருந்துவதாகவும், அவ்வகுப்பைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேறின.

'குறுக்கு வழி'யில் சேர்த்த சொத்துக்கள்

பறிமுதல் செய்ய சட்டம்

டுனிஸ், ஆக. 27—

அரசாங்க ஊழியர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், அரச குடும்பத்தினர் ஆகியோர் நேரிய வழிகளிலின்றி முறை தவறிய வழிகளில் சம்பாதிக்கும் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கான சட்டமொன்று டுனிசியாவில் பிறப்பிக்கப்பட்டுள்ளது

இச்சட்டத்தின்கீழ் குற்றவாளிகளாகக் கருதப்படுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். மேலும் குடியுரிமையை இழக்கவும், அவமானத்துக்குள்ளாகவும் நேரிடலாம்.

கல்வி வளர்ச்சிக்கு ரூ. 2,500 கோடி

ஆண்டுதோறும் ரஷ்யா செலவிடுகிறதாம்

புதுடில்லி, ஆக. 28—

ரஷ்யாவில், தேசிய அபிவிருத்திக்காக, கல்விக்குத்தான் முக்கியத்துவம் தரப்படுவதாக அங்கு சென்று திரும்பியுள்ள இந்திய கல்வித் தூதுக்குழு ஒன்று கருத்தறிவித்துள்ளது.

எல்லா அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றிக்கும், கல்விக்காகப் பணம் செலவிடுவது அவசியம் எனக் கருதப்படுவதால், அந்தச் செலவைக் குறைக்க—கட்டுப்படுத்த முற்படுவதில்லை என்றும் குழு கூறுகிறது.

பேராசிரியர் உமாயூன் கபீர் தலைமையில் சென்று திரும்பியுள்ள அந்தக் குழுவினர், ரஷ்யாவில் கல்விக்காக மட்டும் வரவு-செலவுத் திட்டத்தில் 70 சதவிகிதம் வரை ஒதுக்கப்படுகிறது என்றும், ஆண்டுதோறும் சுமார் ரூ. 2,500 கோடி செலவிடப்படுகிறது என்றும் கூறுகின்றனர்.

குழுவினர் கடந்த ஆண்டு செப்டம்பர் திங்களில் ரஷ்யா சென்று திரும்பினர். அவர்களின் அறிக்கையை சர்க்கார் இப்போதுதான் வெளியிட்டுள்ளனர்.

கல்வித்துறை மத்திய சர்க்காரின் நேரடிப் பொறுப்பில் இருப்பதாகவும், பல்கலைக் கழகங்கள், கல்வி நிலையங்கள் எல்லாம் மத்திய சர்க்கார் கல்வி இலாகா மந்திரியின் நேரடிப் பார்வையிலிருப்பவை என்றும், கலை—கலாசாரத் துறைக்காகவே ஒரு மந்திரி இருப்பதாகவும், ரஷ்ய விஞ்ஞானக் கலைக் கழகம் ரஷ்ய மந்திரிகள் அனைவரின் கூட்டுப் பொறுப்பிலிருக்கும் விசேட அந்தஸ்து பெற்று விளங்குகிறது என்றும் குழுவினர் கருத்தறிவித்துள்ளனர்.

இந்தியக் கல்வி நிபுணர்கள் தூதுக் குழு தனது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது :—

"ரஷ்யாவில் பல மொழிகள் பேசப்படுகின்றன; அங்கு வாழுகிற பல்வேறு இனமக்களின் மொழிகள், பண்பாடு இவற்றை வளர்க்கும் பொறுப்பையும், கட்டிக்காக்கும் பொறுப்பையும் அரசாங்கம் ஏற்று, தொடர்ந்து அதற்கேற்ப செயலாற்றி வருகிறது.

"ரஷ்ய மொழி பேசப்படும் பகுதிகளில் 10 ஆண்டு பள்ளிப் படிப்பு காலத்தில் மாணவர்கள் ரஷ்ய மொழியைக் கற்க 2,400 மணிநேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரஷ்ய மொழி அல்லாத மற்ற மொழிகள் பேசப்படும் பகுதிகளில் ரஷ்ய மொழி கற்றுக் கொள்ள 1,800 மணி நேரம் தான் செலவிடப்படுகிறது. இங்குள்ள மாணவர்கள், தங்கள் சொந்த மொழியைக் கற்றுக் கொள்ள 2,200 மணிநேரம் ஒதுக்கப்படுகிறது.

"பல்கலைக் கழகங்கள், ஆசிரியர் பயிற்சி நிலையங்கள், பள்ளிகள் ஆகியவற்றில், அன்னிய மொழிகள் சொல்லிக் கொடுப்பதில் மென்மேலும் முக்கியத்துவம் செலுத்தப்படுகிறது. மாஸ்கோவில் 3 பள்ளிகளில் இரண்டாம் வகுப்பிலிருந்து ஒரு அயல்நாட்டு மொழியைச் சொல்லிக்கொடுக்க சோதனைத் திட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது."

கிராம மின்சார விரிவுத் திட்டம்

சென்னை, ஆக. 27—

ஒன்பது கிராம மின்சார விரிவுத் திட்டங்களுக்கு மாநில மின்சார போர்டு அனுமதி வழங்கியுள்ளது. இதில் ஒவ்வொரு திட்டமும் இரண்டு இலட்சம் ரூபாய்க்குமேல் செலவாகக்கூடியதாகும்.

அன்பளிப்பு

நெல்லை மாவட்டம், விளாத்திகுளம் தோழர் வி. எஸ். துரைராசு—தோழியர் தங்கபாப்பா ஆகியோரது பெண்மகவுக்கு 19—7—57-ல் "முன்னேற்றக் கொடி" எனப் பெயரிட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அளிக்கப்பட்டது.

* * *

அய்யம்பட்டி தோழர் ஆர். தனக்கோடி அவர்கள் துணைவியாருக்கு 26—7—57-ல் ஒரு பெண்மகவு பிறந்ததன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கென ஒரு ரூபாய் 6 புதுக்காசுகள் அளிக்கப்பட்டன.

‘நெருக்கடிக்குக் காரணர் நிதி மந்திரியே’

மக்கள் சபையில் குற்றச்சாட்டு

‘நாட்டைக் கவிழ்ப்பதற்குக் கம்யூனிஸ்டுகள் முயற்சிக்கிருர்கள்’

டி. டி. கிருஷ்ணமாச்சாரி பதில்

புதுடில்லி, ஆக. 28— நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், மக்கள் சபையில், நிதி ஒதுக்கல் மசோதா விவாதத்திற்குப் பதிலளிக்கையில், கம்யூனிஸ்டுகளின்மீது கடுமையான குற்றச்சாட்டுகளைத் தொடுத்திருக்கிருர்.

விவாதத்தில் கலந்துகொண்ட கம்யூனிஸ்டு உறுப்பினரில் சிலர், நாட்டின் இன்றையப் பொருளாதார நெருக்கடிக்கு நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தான் பெரும் பொறுப்பு ஏற்க வேண்டும் என்றும், அவர், சமீப காலம்வரை பின்பற்றி வந்த இறக்குமதிக் கொள்கை தவறுடையது மட்டுமல்ல — தண்டனைக்குரிய குற்றமுடையது என்றும் கடுமையாகத் தாக்கிப் பேசியிருந்தனர்.

இதற்கெல்லாமாகச் சேர்த்துப் பதிலளிக்கையில் டி. டி. கே. குறிப்பிட்டதாவது :—

“கம்யூனிஸ்டுக் கட்சியினர் செய்கிற எல்லாக் காரியங்களும், மேற்கொள்ளுகிற எல்லா நடவடிக்கைகளும், பேசுகிற எல்லா கூட்டங்களும், நாட்டின் பொருளாதாரத்தை மட்டுமின்றி அரசியல் சட்டத்தையும் குலைக்கிற முயற்சிகளாகும்.

“இது ஒரு புத்திசாலித்தனமான முயற்சி என்று அவர்கள் கருதுவார்களேயாளுல் அது சிறுபிள்ளைத்தனமானதாகும். தங்களுடைய உண்மையான நோக்கங்களை மறைப்பதற்கான முயற்சி என்ருல், அது வீணுனதாகும், திட்டத்திற்குவரும் எல்லா அச்சுறுத்தல்களும் கம்யூனிஸ்டுகளிடமிருந்துதான்.

“இல்லை என மறுத்துரைப்பது மட்டும் உண்மைகளை மறுப்பதற்கு உதவாது; கம்யூனிஸ்டுகள் செய்கிற பிரச்சாரத்தைப் பார்த்தால், திட்டத்தை நிறைவேற்றுவது கடினமாயிருக்கும்போல் தோன்றுகிறது; ஏனெனில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் அவர்கள் குழப்பம் விளைவித்துக் கொண்டிருக்கின்றனர்.”

நச்சுக் காய்ச்சல் தடுப்பு மருந்து

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஆக. 28— “1957 ஆகஸ்டு இறுதிக்குள் ‘இன்புளுயன்சா’ என்றழைக்கப்படும் நச்சுக் காய்ச்சல் தடுப்புக்கான மருந்து 3,000 பகுதிகள் (டோஸ்கள்) தயாராகிவிடும்” என்று மத்திய சுகாதார அமைச்சர் கர்மார்கர், மாநிலங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

வடாற்காடு மாவட்டத் தி. மு. கழகத் தோழர்கட்கு:

அன்புடையீர் !

வ. ஆ. மாவட்டத் தி. மு கழக 3-வது மாநாடு முடியும்வரை, வ ஆ.மாவட்ட தி. மு. க. அலுவலகம் திருவண்ணுமலையில் பணியாற்றும். கழகத் தோழர்கள் திருவண்ணுமலை முகவரியுடன் தொடர்பு கொள்ளவேண்டுகிறேன்.

ஆங்காங்கே, புதியதாகத் துவக்கப்பட்டுள்ள கிளைக் கழகங்களை உடனடியாக மாவட்டக் கழகத்துடன் பதிவுச் செய்து கொள்ள வேண்டுகிறேன். மாவட்டக் கழகத்துடன் பதிவுச் செய்துகொண்ட கிளைக் கழகங்கள் மட்டும்தான் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்ப உரிமை பெற்றவைகளாகும்.

வரவேற்புக் குழு உறுப்பினர்கள் அன்புகூர்ந்து உடனடியாக வரவேற்புக் குழு உறுப்பினர்க்குரிய ‘கட்டணமாகிய ரூ. 5-ம் அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

மாநாட்டிற்கு, கிளைக் கழகத்தின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் ; தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பிரதிநிதி கட்டணமாகிய ரூ. 3-ம் அனுப்பி வைக்கவும்.

கிளைக் கழகப் பெயர்பொறித்த கொடி ஒன்றையும் அனுப்பி வைக்கவும்.

தொண்டர் படையில் பணி ஆற்ற விரும்புவோர், கிளைக் கழகச் செயலாளர் கையெழுத்துடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :—

முல்லை-சத்தி, C/O
ப. உ. சண்முகம், எம்.எல்.ஏ.,
திருவண்ணுமலை.

அன்பன்
முல்லை - சத்தி,
வரவேற்புக் குழுத் தலைவர்;
செயலாளர்,
வ. ஆ. மாவட்ட தி. மு. க.

இரத்தம் கக்கிச் சாக வைக்கும் புதிய ரக வெடிகுண்டுகள்

ஏமன் படைகள்மீது பிரிட்டன் விசுகிறதாம் !

லண்டன், ஆக. 29— ஏமன் படைகளை பிரிட்டன் மிகவும் மிருகத்தன்மையுடன் தாக்குகிறதாம் !

இப்போது ஒரு புதுரகக் குண்டுகளை ஏமன் படைமீது பிரிட்டிஷ் படைகள் வீசுகிறதாம்; இதனுல் இரத்தம் கக்கிப் போர் வீரர்கள் சாகின்றனராம் !

பிரிட்டன் மீது இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளது ஏமன் நாடு !

ஆனுல், இதை உண்மையல்ல என்று பிரிட்டன் மறுத்துள்ளது.

நாசம் விளைவிக்கும் குண்டுகளைப் பயன்படுத்தவில்லை என்று பிரிட்டிஷ் விமானப்படை நிலையம் தெரிவித்துள்ளது.

ஏமன் தூதுவராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘இந்தக் கோரம் நிறைந்த தாக்குதலில் பிரிட்டன் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது’ என்று குறிப்பிட்டிருக்கிறது.

‘விமானத்திலிருந்து பிரிட்டன் குண்டுகளை வீசுகிறது; குண்டுகள் விழுந்த இடத்தில் வெடித்ததும், ஒரு திரவப் பொருள் அதிலிருந்து வெளிப்பட்டு எரியத் தொடங்குகிறது ; இதிலிருந்து கிளம்பும் புகையை உட்கொண்டதும் படையினர் இரத்தம் கக்கி இறக்கின்றனர்’ என்றும் ஏமன் தெரிவித்துள்ளது.

காங்கிரசார் ஆட்சியில் !

அஞ்சல் உறையின் விலை மேலும் உயருகிறது

புதுடில்லி, ஆக 28— காங்கிரசார் ஆட்சிக்கு வந்தால் அஞ்சல் அட்டையின் விலையும், அஞ்சல் உறையின்(கவர்) விலையும் குறைக்கப்படும் என்று மக்களிடம் கூறிவந்தவர்கள் இன்று பதவியில் இருந்துகொண்டு சொல்லுக்கும் செயலுக்கும் மாறுபட்டு நடப்பதையும், மக்களுக்கு ஏமாற்றத்தையும் தொல்லைகளையும் அதிகப்படுத்திவருவதையும் நாடு உணரத் துவங்கிவிட்டது.

அஞ்சல் உறையின் விலை புதிய காசு அமுலாக்கப்பட்டதும் 2 அணுவிலிருந்து 13 புதிய காசாக உயர்ந்துள்ளது; இப்போது மீண்டும் அதன் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

இனி, 15 புதிய காசுகள் கொடுத்தே அஞ்சல் உறை வாங்க வேண்டுமாம் !

இதற்கு மக்கள் சபையும் அனுமதியளித்துவிட்டது.

மதுவிலக்கின் பலன் ?

ஆராயக் குழு அமைக்கப்படும்

புதுடில்லி, ஆக. 28— நாட்டில் மதுவிலக்குச் சட்டம் அமுலாக்கப்பட்டதன் காரணமாக அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு தனிக் குழு அமைப்பது பற்றி மத்திய அரசாங்கம் மாநிலங்களின் கருத்தை அறிந்து வருகிறதாம்.

மக்கள் சபையில் உள்நாட்டு அமைச்சர் தத்தார் இதைத் தெரிவித்துள்ளார்.

ஜெயப்பிரகாசின் அரசியல்துறவறம்!

பி. சோ. கட்சி உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகல்

புதுடில்லி, ஆக. 28— பி. சோ. கட்சியில் தான் வகித்துவந்த உறுப்பினர் பதவியையும் துறந்துவிடுவதாக ஜெயப்பிரகாஷ்நாராயணன் தெரிவித்திருக்கிருர்.

சோஷலிஸ்டுகளின் ஒற்றுமைக்காக, தாளுக இனி எதும் செய்யப்போவதில்லை என்றும், பி. சோ. கட்சித் தலைவர் கங்காசரண் சின்ஹாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிருராம்.

‘என்ருலும், அவசியம் எனத் தோன்றும்போது நான் ஆலோசனை தருவேன்; கட்சியின் நடவடிக்கைகளை வெளிப்படையாகவோ, அல்லது தனிப்பட்ட முறையிலேயோ கண்டிப்பேன்’ என்றும் கூறியிருக்கிருர்.

வரிகள் மேலும் அதிகரிக்குமாம் !

புதுடில்லி, ஆக. 28— ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிவைக்கவும், பணவீக்கம், விலையேற்றம் இவற்றைக் கட்டுப்படுத்தவும் நாட்டின் தேவைக்கேற்ப கடன் வசதிகளைத் திரட்டுவதில் இந்திய அரசாங்கம் உடனடி கவனம் செலுத்திவருகிறது என்று நிதியமைச்சர் டி. டி. கே. மக்கள் சபையில் தெரிவித்தார்.

நிதி மசோதாவின்மீது நடந்த பொது விவாதத்தின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுவிட்டு மேலும் பேசுகையில், ‘இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள திட்ட அம்சங்கள் நிறைவேறவேண்டுமாளுல், மேலும் அதிக வரிகள் விதிக்கநேரிடும்’ என்று அபாய அறிவிப்புத் தந்துள்ளார்.

அண்ணு அவர்களுக்கு

புடையூர் பஞ்சாயத்து வரவேற்பு

30—8—57-ல், அண்ணு அவர்கள் திருமுட்டம் வருகை தரும்போது, சிதம்பரம் வட்டம், புடையூர் ஊராட்சி மன்றத்தின் சார்பில், மாலை 3 மணியளவில், அண்ணு அவர்களுக்கு வரவேற்பு அளிப்பதென ஊராட்சி மன்றத் தலைவரும், தி. மு. க. செயலாளருமான தோழர் கோவிந்தசாமி தலைமையில் கூடிய மேற்படி ஊராட்சி மன்றக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

திருமுட்டம் பஞ்சாயத்து வரவேற்பு

30—8—57-ல், வருகை தரவிருக்கும் அண்ணு அவர்களுக்கு திருமுட்டம் ஊராட்சி மன்றச் சார்பில் வரவேற்பு அளிப்பதென தலைவர் தோழர் இராசகோபால் தலைமையில் கூடிய மேற்படி ஊராட்சி மன்றம் முடிவு செய்துள்ளது.

சிங்கம்புணரி கே. வி. கே. சாமி படிப்பகத் திறப்பு விழா

31—8—57 மாலை 5 மணிக்கு தோழர் கண்ணதாசன் அவர்களால் மேற்படி படிப்பகம் திறந்து வைக்கப்படும்.

பொதுக்கூட்டம்

மாலை 6 மணிக்கு மாவட்டக் கழக ஆரம்பப் பள்ளி முன்பு நடக்கும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கண்ணதாசன், ஆ. குருசாமி ஆகியோர் பேசுவர்.

அண்ணு சொற்பயிற்சிக் கூட்டம்

30—8—57 மாலை 6½ மணிக்கு, சென்னை-21, கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றத்தில் (59, சஞ்சீவிராயன் தெரு). தோழர் சுந்தரேசன் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; தோழர் சி. மா. பக்தவத்சலம், மற்றும் பலர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

30—8—57 மாலை 6½ மணிக்கு, சென்னை—குளை ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனூர் நினைவுப் படிப்பக மனையில் (ஆலந்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு), தோழர் த. மன்னூர் தலைமையில் 80-வது சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; ‘உரிமைக் கிளர்ச்சி’ என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

அண்ணு சுற்றுப்பயணம்

ஆக. 30 : காலை-மாயவரம்— திருமண[ம்]
இரவு-ஸ்ரீமுஷ்ணம்
செப். 2 : சென்னை — பெத்து நாய்க்கன்பேட்டை
8 : காலை-காஞ்சி— திருமண[ம்]
மாலை-திருச்சி— கலைக் கழக[ம்]
12 : காலை - கள்ளக்குறிச்[சி] —திருமண[ம்]
14 : அறந்தாங்கி
15 : கோவை
18 : கீரனூர்
20 : சின்னதாராபுரம்

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் சுற்றுப்பயணம்

ஆக. 30 : திருவள்ளூர்
31 : சென்னை 5-வது வட்ட தி.மு. கழகப் பொதுக் கூட்டம்
செப். 1 : புதுவை
2 : சென்னை மக்கள் மன்றம்-ஆண்டு விழா
5 : காலை-திரவி
மாலை-பொறையார்
6 : அதிராம்பட்டணம்
7 : காரியாங்குடி (திருவாரூர்)
8 : சென்னைப் பொதுக் கூட்டம்
13 : ஜோலார்பேட்டை (வ. ஆ.)

கழகக் கூட்டங்கள்

★

திருமுட்டம் :

பெருமாள் கோவில் அருகில்
30—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஆர். தட்சிணுமூர்த்தி
பேசுவோர் :
அண்ணு
எம். செல்வராசு எம்.எல்.ஏ.
சி. நடராசன் எம்.எல்.ஏ.
எம். ஆனந்தன் எம் எல்.ஏ.
தில்லை-வில்லாளன்
போன். சோக்கலிங்கம்
புலவர் ஆறுமுகம்
செல்வி இளங்கோ
சிதம்பரம் நாராயணசாமி குழுவினரின் இன்னிசையுண்டு.

★

பஞ்சமாதேவி :

தி. மு. கழகத் துவக்கவிழா
30—8—57 இரவு 7 மணிக்கு
தலைவர் : எம். குழந்தைவேல்
கொடியேற்றுபவர் :
ஏ. அம்மையப்பன்
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
எம். கே. கரிகாலன்
கே. எஸ். பி. சந்தானம்

★

ஏறல் வண்டிப்பேட்டை :

31—8—57 இரவு 7 மணிக்கு
தலைவர் : பி. இராசன்
பேசுவோர் :
ஏ.வி.பி.ஆசைத்தம்பிஎல்.எல்.ஏ.
எம். எஸ். சிவசாமி
சி. சோ. முத்து
ஜெகவீரராஜேந்திரன்
கே. சுப்பையா

★

முத்துப்பேட்டை :

ஏ. எஸ். என். அவர்கள் திடலில்
31—8—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
க.அன்பழகன்எம்.ஏ.,எல் எம்.ஏ.
இன்னிசை : மன்னை—சுந்தரேசன்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ.